ஆவின் நிறுவனத்தில் பணியாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டடம் ஆரம்ப காலத்தில் வாடகைக்கு விடப்பட்டு, தற்போது அங்கே நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்த இடத்திற்கு அருகில் ஏற்கெனவே ஒரு ஆவின் பாலகம் இருப்பதால், அந்தக் கட்டடத்தில் ஆவின் பாலகம் அமைக்கத் தேவையில்லை. மேலும் அந்தக் கட்டடத்திற்கு அருகில் கால்வாய் ஓடுவதால் கட்டடத்தைப் புதுப்பித்து பயன்படுத்த முடியாமல் உள்ளது. ஆகையால் அந்தக் கட்டடம் தேவையிருப்பின் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 462, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

462—

தூர் வாருதல்

***19605—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை அணையைத் தூர் வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வைகை அணையைத் தூர் வார அரசு முன்வருமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், வைகை அணையைத் தூர் வாருவதற்கு விருப்ப வெளிப்பாடு, அதாவது Expression of Interest 11 நிறுவனங்களிடமிருந்து 26–9–2012 அன்று பெறப்பட்டது. 7–12–2012 அன்று முதன்மை தலைமைப் பொறியாளர், (நீர்வள ஆதாரத் துறை) அவர்களின் தலைமையில் நடைபெற்ற தொழில்நுட்பக் குழுவின் அறிவுரைப்படி, வைகை அணை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மணல் படிமானங்கள் பற்றிய ஆய்வுகள்

2013 மே 10]

மேற்கொள்ள உரிய மட்ட அளவுகள் நீர்பரப்பு மேலாண்மைப் பொறியாளர்களால் எடுக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு வழிகளில், பல்வேறு நிறுவனங்களிடம் அங்கே எந்தெந்த பணிகளைச் செய்ய வேண்டும் என்ற ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தொழில்நுட்பக் குழுவின் முடிவின்படி தமிழகத்தினுடைய ஈடு இணையில்லா மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை அணையினுடைய நீர் ஆதாரத்தை விவசாயத்திற்காகவும், குடிநீருக்காகவும் 5 மாவட்டங்கள் சார்ந்து இருக்கின்றன என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அந்த அணை கட்டப்பட்டு ஏறத்தாழ 55 ஆண்டுகள் ஆகின்றன. 7,000 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட அந்த அணையில் இப்பொழுது 6,000 மில்லியன் கன அடி அளவுக்குத்தான் தண்ணீர் தேங்குகிறது. ஆயிரம் மில்லியன் கன அடி நீர் தேக்க முடியாத அளவுக்கு 20 அடி உயரத்திற்கு மணலும், சகதியும் நிரம்பியிருக்கின்றன. அணை கட்டப்பட்டு 55 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே, இந்த 2 இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு பாசன வசதி கொண்ட, அதேபோல் 5 மாவட்டத்திற்குக் குடிநீர் ஆதாரங்களைத் தரக்கூடிய இந்த அணை என்பது ஆயிரம் மில்லியன் கன அடி குறைந்து இருப்பதனால் 40 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கான பாசனமும் இந்தக் காலத்தில் குறைந்திருக்கிறது. இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதான்*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ஏ. லாசர்: *5 மாவட்டங்களுடைய ஆதாரமான மிகப் பெரிய இந்த அணையில் 20 அடி தேங்கி இருக்கக்கூடிய இந்த மணலையும், சகதியையும் அப்புறப்படுத்தினால் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் பயன்பட்டு அந்த 5 மாவட்ட விவசாயிகளுடைய வயிற்றில் பால் வார்த்ததாக மாறும். எனவே, அந்த மணலை அகற்றி, விலைக்கு விற்றாலே செலவுகளை ஈடுகட்டி விடலாம் என்று பொறியாளர்கள் சொல்கிறார்கள். அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய*

நடவடிக்கையை காலத்தில் எடுத்தால், அந்த 5 மாவட்டத்து மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை அணையானது தென் மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகின்ற ஒரே காரணத்தினால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த ஆய்வுப் பணிகளை முதலில் வைகை அணையில் துவக்க வேண்டுமென்று சொல்லி அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) விரைவிலே தென் மாவட்ட மக்களின் வயிற்றிலே மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு ஏ. லாசர் அவர்களுடைய வயிற்றிலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பால் வார்ப்பார்கள் என்ற உறுதியை இங்கே கூறிக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு ஒரு துணைக் கேள்வியைக் கேட்க விரும்புகின்றேன்.*

இதேபோல், என்னுடைய தொகுதியிலே சோத்துப்பாறை அணை, மஞ்சளாறு அணை என்று இரண்டு அணைகள் இருக்கின்றன. இவையும் தூர் வாரப்படாமல் இருக்கின்றன. சோத்துப்பாறை அணையை தூர் வாருவதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவாகும் என்ற தகவலை பொறியாளர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்கள். மஞ்சளாறு அணையும் அதே நிலையில் இருப்பதனால், இவை இரண்டையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தூர் வார முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

2013 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து அணைகளிலும் அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும், படிப்படியாக முன்னுரிமை கொடுத்து, எந்தெந்த அணைகளுக்கெல்லாம் முன்னுரிமை கொடுக்க வேண்டுமோ அதற்கெல்லாம் கொடுத்து, அந்தப் பணிகளை துவக்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்களின் கோரிக்கையைக் கேட்காமலேயே தெரிந்து, அதைக் கொடுக்கும் சக்தி கடவுளுக்கு மட்டும்தான் உண்டு. அவ்வாறு கேட்காமலேயே தொண்டாமுத்தூர் தொகுதிக்கு பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 114.25 கோடி ரூபாய் செலவில் 7 பேரூராட்சிகள், 7 ஊராட்சிகள் பயன்படும் குடிநீர்த் திட்டத்தை அறிவித்த, ஏழரை கோடி தமிழ் மக்களின் உரிமைக் குரல், வருங்கால பாரதம், காக்கும் கடவுள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில், கோவை மாவட்டம் மற்றும் தொண்டாமுத்தூர் தொகுதி மக்களின் சார்பாக, நன்றி மலர்களைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.*

தொண்டாமுத்தூர் தொகுதிக்கு உட்பட்ட குறிச்சிக்குளம், செங்குளம், பேரூர்குளம், வேடப்பட்டிக்குளம் ஆகிய குளங்களுக்கு நீர் வரும் வாய்க்கால்களைத் தூர் வாரியும், குறிப்பாக குறிச்சிக்குளத்தைத் தூர் வாரிக் கொடுத்தால் நல்லது. மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலில், கோவை மாநகராட்சி, கரைமீது மக்கள் நடைப் பயிற்சி செய்ய walking track *அமைத்து படகுத் துறை அமைக்கத் தயாராக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தூர் வார ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அங்கே தூர் வாருவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவிலே அவருடைய கோரிக்கை நிறைவேறும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 463, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

463—

கால்நடை மருத்துவமனை

***5080—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, தாமோதரஹள்ளி ஊராட்சி, சாதிநாயக்கன்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தொகுதி, தாமோதரஹள்ளி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சாதிநாயக்கன்பட்டி கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கால்நடைகளின் அலகு ஏறக்குறைய 3,000–க்கு மேல் இருப்பதால் அங்கே ஒரு கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறு உள்ளது. எனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று அங்கே ஒரு கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*